பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 26 திங்கட்கிழமை 11.08.2025 | அதிர்வு 10

## முத்துஐயன்கட்டுக் கொலை: சுமந்திரன் கடும் கண்டனம்!

### நீதியான விசாரணைக்கு பொலிஸிடம் வலியுறுத்து



"முல்லைத்தீவு, முத்து ஐயன்கட்டுப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் 06







10th August 2025

HE Anura Kumara Dissanayake
President of the Democratic Socialist Republic of Sri Lanka
The Secretariat
Colombo 1.

Your excellency

DEATH CAUSED BY SOLDIERS FROM MUTTAIYANKATTU ARMY CAMP

Your Excellency's attention is drawn to the finding of the body of Edirmanasingam Kabilraj (32 Years) in the Muttaiyankattu Tank yesterday morning.

It has now been revealed that on the 07th August 2025, 5 men were asked to come to the 63rd Division camp of Sri Lankan Army and been severely beaten by the soldiers there. One of them, the said Kabilraj, had gone missing and later his body was found floating in the Tank.

We have come to know that some soldiers have been arrested in this regard. We bring this matter to your Excellency's urgent attention not only to urge your Excellency to ensure unhindered thorough investigation and for the culprits to brought to book, but also to highlight the oppressive conduct and excessive presence of the military in the North and the East.

We urge your Excellency to take immediate steps to remove the excessive presence of the military without delay, and also to ensure the process of Justice in this instance is carried out without interference.

We have called for a "Hartal" on Friday the 15th August 2025, in the entirety of North and East Provinces to protest against the military's brutality that continues to-date.

Yours Faithfully

C.V.K Sivagnanam
President

Office

M.A.Sumanthiran PC
General Secretary

# அதீத இராணுவப் பிரசன்னத்தை ஆட்சேபித்து 15இல் ஹர்த்தால்!

## தமிழரசுக் கட்சி அறிவிப்பு ஜனாதிபதிக்கும் தெரிவிப்பு

முல்லைத்தீவு, முத்துஐயன் கட்டுக் குளத்தில் தமிழ் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டமையை ஒட்டி இலங்கை இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்படும் நிலையில், தமிழர் தாயகத்தில் இன்று வரைத் தொடரும் இராணுவத்தின் மிருகத்தனத்தை எதிர்த்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹர்த்தால் நடத்த இலங்கைத் தமிழரசுக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது. 05

# இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்ட நபர் தப்பிச் செல்ல முயன்றபோது முத்துஐயன்கட்டுக் குளத்தில் மூழ்கிப் பலி

## இப்படிக் கூறுகின்றது ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவு





யன்கட்டுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர், நீரில் மூழ்கியே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- 05





இலங்கை அரசியலில் ஒரு பரவணிப் பண்பியல்பு உண்டு.

யாரேனும் தரப்பு ஆட்சி அதிகாரத்தை அதிக வலிமையுடன் கைப்பற்றினால், எஞ்சிய அரசியல் தரப்புக்கள் அந்த ஆட்சி அதிகார தலைமைக்கு எதிராக தங்களுக்குள் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு எதிர்த்து நிற்பதுதான் அது.

தமிழர் தரப்பிலும் கூட இப்போது அதுதான் நடக்கிறது. தமிழரசுக் கட்சி தனித்துத் தனது வலிமையை நிரூபித்த பின் புலத்தில், மாற்றுக் கட்சிகள் மற்றும் மற்றைய கட்சிகள் தங்களை அறியாமலேயே தங்களுக்குள் ஒன்றுபட்டு தமிழரசுக்கு எதிராகத் திரண்டு நிற்கின்றன.

அதே கதைதான் நீண்ட காலமாக தென்னிலங்கையில் 05



# '2029 இல் நாமல் ஜனாதிபதி' இது மொட்டுவின் பகல் கனவு

## விசாரணைகளுக்கு அஞ்சியே இந்த நாடகம் அரங்கேற்றம் என்றும் அநுர அரசு சாட்டையடி

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அஞ்சி, அவற்றைத்திசை திருப்பும் நோக்கிலேயே "2029 இல் நாமல் ஜனாதிபதி" என்ற கதையைக் கூற மொட்டுக் கட்சியினர் ஆரம்பித்துள்ளனர். இது மொட்டுவின் பகல் கனவு மாத்திரமே."

– இவ்வாறு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

2029 ஆம் ஆண்டில் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாவார் என மொட்டுக் கட்சியினர் கூறி வருவது தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2029 இல் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி என்ற தகவல் திட்டமிட்ட அடிப்படையிலேயே பரப்பப்பட்டு வருகின்றது. ஜனாதிபதியாவதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஓரிரு சபைகளிலாவது வென்று ஆட்சி அமைத்திருக்க வேண்டும் அல்லவா? அந்தத் தேர்தலில் கூட அவர்கள் மண்கவ்வினர்.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் சி.ஐ.டியில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக உள்ள விசாரணைகள் உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சரியான திசையை நோக்கி விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

எனவேதான் விசாரணை அதிகாரிகளுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் நோக்கில், விசாரணையைத் திசை திருப்பும் வகையில் இப்படியான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது மொட்டுவின் பகல் கனவு மாத்திரமே."

– என்றார்.

# முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு 'மொட்டு' சவால்

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்புர,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்து விட்டது. எனினும், மாகாண சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை. அது நடத்தப்பட வேண்டும். அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. எனவே, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

எதிரணிகள் ஒன்றிணைந்து கோரினால் தேர்தலை நடத்தத் தயார் என




அரச தரப்பில் கூறப்பட்டது. ஒன்றாக அல்ல தனித்துப் போட்டியிடுவதற்குக் கூட நாம் தயார். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம்.

அரசு கூறுவதை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை என்பது தேர்தல் மூலம் நிரூபணமாகும்." – என்றார்.



# சஜித் தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் இருப்பது அரசுக்கு நல்லதாம்

## அநுர அரசு கூறுகின்றது

"இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சஜித் பிரேமதாஸ நீடிப்பது அரசுக்கு நல்லது."

– இவ்வாறு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"பதவிகளுக்கு டிசம்பர் மாதம் என சஜித் கால எல்லை நிர்ணயிப்பார். ஆனால், அது எந்த வருடமாக இருக்கும் எனக் கூறுவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குப் பலரும் போட்டியிடுகின்றனர். அதனைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவே சஜித் போராடுகின்றார். மாறாக அரச தலைவர் பதவிக்கு வருவது அவரின் எண்ணமாக இல்லை.

அரசு பொருளாதாரத்தை வலுப்படுத்தி வருகின்றது. சஜித்தால் என்ன செய்ய முடியும்? அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருப்பது அரசுக்கு நல்லது."

– என்றார்.



# அனைத்து மாகாணங்களிலும் குற்ற விசாரணைப் பிரிவுகள்

## பதில் பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

அனைத்து மாகாணங்களிலும் குற்றவிசாரணை பிரிவுகளை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களை தடுக்கும் விசேட நடவடிக்கையின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொலிஸ் உத்தியோகத்தர்களால் பொது மக்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.



# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் புறக்கணிப்புத் தீர்மானம் ஒத்திவைப்பு

இன்று காலை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த நாடு தழுவிய பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சருடனான கலந்துரையாடலின் போது தங்களது கோரிக்கைக்கு கிடைத்த நேர்மறையான மற்றும் ஆக்கபூர்வமான பதில்களைக் கருத்தில் கொண்டு சங்கததின் நிர்வாக குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் இடமாற்ற செயல்முறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் இணக்கப்பாட்டை செயல்படுத்துவது தொடர்பான போக்குகள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# நாட்டில் இன்று பிற்பகல் இடியுடன் கூடிய மழை

நாட்டில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் ஊவா மாகாணத்திலும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களிலும், நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று வீசுவதுடன், மின்னல் தாக்கங்களால் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அந்தத் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# வெளிநாட்டுப் பணியாளர்களின் பணவனுப்பல் விகிதம் அதிகரிப்பு



வெளிநாட்டு பணியாளர்களின் பணவனுப்பல் விகிதம் தற்போது அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.


இதன்படி, கடந்த ஏழு மாதங்களில் மாத்திரம் வெளிநாடுகளில் வீட்டு பணிப்பெண்களாக பணிபுரியும் இலங்கையர்களினால் 4.43 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 3.71 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக பதிவாகியிருந்தது.

நடப்பாண்டின் ஜுலை மாதத்தில் மாத்திரம் பணவனுப்புதல் 697.3 மில்லியன் டொலராக பதிவாகியுள்ளது.

# சேரனின் கவிதைத் தொகுப்பு சிங்கள மொழியில் வெளியீடு






"லசோ தியவென பூமிய" (கண்ணீரில் உருகும் நிலம்) புகழ்பெற்ற தமிழ் கவிஞர் ருத்மூர்த்தி சேரனின் தெரிவு செய்யப்பட கவிதைத் தொகுப்பின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் வெளியீடு நாளை இடம்பெறவுள்ளது.

கொழும்பு தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு இந்த நூல் வெளியிடப்படவுள்ளது.

சேரனின் நீண்டகால கவிதைகளின் தொகுப்பு சிங்கள மொழிபெயர்ப்பில் வெளிவருவது இதுதான் முதல் தடவையாகும். முக்கியத்துவமிக்க இப்படைப்பாக்கம் மனித உரிமை செயற்பாட்டாளரும், எழுத்தாளரும் மற்றும் சட்டத்தரணியுமான சஞ்சுளா பீட்டர்ஸினால் படைப்பாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கவிஞர் சேரன் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார். மேலும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலாநிதி குமுது குசும் குமார கலந்து கொண்டு, சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்த கவிதை நூல் விமர்சி வெளியீட்டகத்தால் வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

இடம் பெற்று வருகிறது.

ராஜபக்ஷக்கள் வலிமையானதும், அவர்களுக்கு எதிராக எதிரணிகள் ஒன்றுபட்டு நின்றன. தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தவும் முயற்சித்தன. அதன் பயனாகத்தான் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

ஆனால் அவர் வலிமையான ஜனாதிபதியாக இல்லாத காரணத்தினால் அவருக்கு எதிராக மற்ற எதிர்க்கட்சிகள் ஒன்றுபடும் நிலை இருக்கவில்லை.

இப்போது யாரும் எதிர்பாராத விதத்தில் தேசிய மக்கள் சக்தி தனித்து மிகவும் வலுவான ஆட்சித் தரப்பாக ஸ்திரமடைந்துவிட்டது.

இப்போது அதனை வெளியேற்றுவதற்காக - அகற்றுவதற்காக - பிற எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான முயற்சிகள் பல தரப்புகளிலும் எடுக்கப்படுகின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் நான்கு ஆண்டுகள் இருந்தாலும், அதற்கிடையில் இப்போது மிக வலிமையாகப் பதவியில் இருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸ்நாயக்கவை தோற்கடிக்கும் ஒரு பொது வேட்பாளரை தயார் செய்வது குறித்து பல தரப்புகளிலும் சிந்திக்கப்படுகிறது.

அப்படி ஒரு வேட்பாளராகத் தாம் களமிறங்கும் யோசனையில் சில நகர்வுகளை முன்னாள் அமைச்சரும், அமைச்சரவை அந்தஸ்தோடு இந்தியாவுக்கான தூதராகப் பணியாற்றியவருமான மிலிந்த மொறகொட ஆரம்பித்திருக்கிறார் என்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் அதிகம் பேச்சு அடிபடுகின்றது.

பொது வேட்பாளராகக் களமிறங்கும் தமது உள்நோக்கத்திற்கான கடை பரப்பலை மிலிந்த மொறகொட ஏற்கனவே ஆரம்பித்து விட்டார் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

இதற்காக எதிர்த்தரப்பில் உள்ள அரசியல் பிரமுகர்களை மிலிந்த மொறகொட சந்தித்துப் பேசி வருகிறார் என்றும், இந்த வரிசையில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் மற்றும் மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்றோரோடும் அவர் பேச்சு நடத்தினார் என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து தமிழரசுக் கட்சிச் செயலாளர் சுமந்திரனோடு தொடர்பு கொண்டு கேட்டேன்.

"ஆம். மிலிந்த மொறகொடவைச் சந்தித்தேன். ஆனால் அவர் பொது வேட்பாளராகத் தாம் களமிறங்கும் திட்டம் பற்றி எதுவும் பேசவில்லை. எதிரணிகளை ஒன்றிணைத்து பொது மேடை அல்லது கட்டமைப்பு ஒன்றை அமைப்பது பற்றிய திட்டம் அவரிடம் இருப்பதாக அறிந்து கொண்டேன்." - என்றார் சுமந்திரன்.

தம்மைப் பொது வேட்பாளராக குறிப்பிடாமல், எதிரணியின் பொது மேடை அல்லது கட்டமைப்பு என்ற பெயரில் களத்தில் நுழைவதற்கான வாய்ப்பு குறித்து மிலிந்த மொறகொட சிந்திக்கிறார் எனத் தெரிகிறது.

இந்த தசாப்தத்தின் ஆரம்ப வருடங்களில் இந்திய தூதராக இருந்த மிலிந்த மொறகொட, டெல்லி ஆட்சி தரப்போடு மிக நெருக்கமாகப் பழகியவர்.

அத்தகையவர் பொது வேட்பாளராகக் களம் இறங்குவதை இந்தியா வரவேற்கும் என அவருக்கு சார்பான சில வட்டாரங்கள் கூறினாலும் அதனை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

மஹிந்த, கோட்டாபய, ரணில் போன்றவர்களை வீழ்த்துவதற்காக பொது வேட்பாளரைக் களம் இறக்குவதில் ஒரு காலத்தில் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்கர் மும்முரமாக இருந்தார்.

இப்போது அதே அநுரகுமார திஸநாயக்கவை வெளியேற்றுவதற்கு பொது வேட்பாளர் என்ற பேச்சு தொடங்கி இருக்கிறது. இதுதான் இலங்கையின் அரசியல் விநோதமோ?

---

## அதீத இராணுவ....

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கடிதம் மூலம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கும் அறிவித்துள்ளனர்.

நேற்று அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

"ஓகஸ்ட் 09, 2025 அன்று காலை, முத்துஐயன்கட்டுக் குளத்தில் எதிர்மன சிங்கம் கபில்ராஜ் (வயது 32) என்பவரின் உடல் மீட்கப்பட்டமை குறித்து உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

ஓகஸ்ட் 07, 2025 அன்று, இலங்கை இராணுவத்தின் 63 ஆவது பிரிவு முகாமுக்கு 5 பேர் வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர் எனவும், அங்குள்ள இராணுவத்தினர் அவர்களைக் கடுமையாகத் தாக்கினர் எனவும் தற்போது தெரியவந்துள்ளது. அவர்களில் கபில்ராஜ் என்ற நபர் காணாமல்போனார். பின்னர் அவரது உடல் முத்துஐயன்கட்டுக் குளத்தில் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக இராணுவத்தினர் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். தடையின்றி முழுமையான விசாரணையை உறுதி செய்வதற்கும், குற்றவாளிகள் மீது வழக்குத் தொடுப்பதற்கும் மட்டுமல்லாமல், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தின் அடக்குமுறை நடத்தை மற்றும் அதிகப்படியான பிரசன்னத்தை முன்னிலைப் படுத்தவும், இந்த விடயத்தை உங்கள் அவசர கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

இராணுவத்தின் அதிகப்படியான பிரசன்னத்தைத் தாமதமின்றி அகற்ற உடனடி நடவடிக்கைகளை எடுங்கள். இந்த நிகழ்வில் நீதி செயல்முறை குறுக்கீடு இல்லாமல் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யவும் நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று வரை தொடரும் இராணுவத்தின் மிருகத்தனத்தை எதிர்த்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ஓகஸ்ட் 15, 2025 வெள்ளிக்கிழமை 'ஹர்த்தால்' நடத்த அழைப்பு விடுத்துள்ளோம்."

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இராணுவத்தால்...

"முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் சிவநகரில் பிரதேசத்தில் அமைந்துள்ள 12 ஆவது சிங்கப் படையணி முகாமை அப்புறப்படுத்துவதற்குச் சில நாள்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது, 07.08.2025 ஆம் திகதியன்று இரவு வேளையில் அகற்றப்பட்ட இரும்பு மற்றும் வெளிப்புறப் பொருட்களை எடுத்துச் செல்லதற்காக அதன் முகாம் வளாகத்தினுள் அனுமதியின்றி நுழைந்த ஐந்து பேரை விரட்டியடிப்பதற்காக முகாமிலுள்ள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அதில் தப்பிச் செல்ல முயன்ற ஒருவர் முத்துஐயன்கட்டுக் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய பொலிஸ் விசேட குழுவால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி நபர்கள் முகாம் வளாகத்தினுள் நுழைந்தபோது, முகாமிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களைக் கண்டு விரட்டியடிக்க முற்பட்ட போது, இதன் விளைவாக, உள்ளே நுழைந்தவர்கள் தாக்கப்பட்டது தெரியவந்ததன் காரணமாக சிப்பாய் ஒருவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், முகாமுக்குள் நுழைந்து திருட்டுச் சம்பவத்தை மேற்கொள்வதற்காக இந்தக் குழுவுக்கு உதவிய மேலும் இரண்டு சிப்பாய்களும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரையும் 09.08.2025 ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். மூன்று சந்தேகநபர்களையும் 19.08.2025 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சடலம் தொடர்பாக வெளிப்படையான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் எந்தவித செல்வாக்கும் இல்லாமல், வெளிப்படையாகவும், பாரபட்சமின்றியும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ஒட்டுசுட்டான் பொலிஸாரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து அந்தப் பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்." - என்றுள்ளது.

# அருணை ஜயசேகரவை தற்காலிகமாக பதவிநீக்கி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டும்

## அஜித் பி. பெரேரா தெரிவிப்பு



பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவை தற்காலிகமாகவாது பதவி நீக்கம் செய்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சுயாதீன விசாரணைக்கு இடமளித்து நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி இருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியை கண்டுபிடித்து சட்டத்துக்கு முமன் நிறுத்துவதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதாகவும் தேர்தல் காலத்தில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதியாகும். இதனை நாங்களும் தெரிவித்தோம். தற்போதுள்ள அரசாங்கமும் தெரிவித்திருந்தது. என்றாலும் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது அதிக நம்பிக்கைவைத்து ஆட்சியில் அமர்த்தினார்கள். அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நெருங்கும் நிலையில் இந்த தாக்குதல் தொடர்பான பாரிய விடயங்கள் எதனையும் இதுவரை வெளிப்படுத்த முடியாமல் போயிருக்கிறது.

அதேநேரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலத்தில்கிழக்குமாகாண இராணுவ கட்டளை தளபதியாக இருந்த அருண ஜயசேகர, தற்போது இந்த அரசாங்கத்தின் பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார். இவர் இந்த தாக்குதல் தொடர்பில் பிரதான சாட்சியாளர். அப்படியான ஒருவரை பொறுப்புவாய்ந்த பதவியில் வைத்துக்கொண்டு, மேற்கொள்ளப்படும் விசாரணையில் சுயாதீனத்தன்மையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

அதனால் பாதுகாப்பு அருண ஜயசேகர பிரதி பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து விலகி, அரசாங்கத்தின் கௌரவத்தை பாதுகாத்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளின் சுயாதீனத்தை பாதுகாப்பார் என நாங்கள் நம்புகிறோம். அவ்வாறு இல்லாமல் அரசாங்கம் தொடர்ந்தும் அவரை இந்த பதவியில் வைத்துக்கொண்டிருக்குமானால், அது அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்படும் பாரிய குற்றச்சாட்டாக அமையும். குறிப்பாக இந்த தாக்குதல் தொடர்பில் இடம்பெற்றுவரும் விசாரணைகளில் இதுவரை காலமும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருப்பதற்கு காரணம் அருண ஜயசேகரவா என்ற கேள்வி எழுகிறது.

இதுதொடர்பாக அரசாங்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பல தடவைகள் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் தெரிவித்திருந்தபோதும் அரசாங்கம் இதுதொடர்பில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்தது. அதனாலே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர தீர்மானித்தோம்.

அதேநேரம் அருண ஜயசேகரா இந்த பதவியில் இருப்பது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவ விசாரணைக்கு இடையூறு என கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடக பேச்சாளரும் தெரிவித்திருந்தார். சந்தேகத்துக்குரிய நபரை விசாரணைகளின் மேல் இடத்தில் வைத்தால், அந்த நடவடிக்கை இடம்பெறுவதில்லை என்பது சாதாரண நபருக்கும் புரிகிறது.

எனவே தற்காலிகமாகவேனும் அருண ஜயசேகரவை பிரதி பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து நீக்கி, சாதாரண விசாரணைக்கு இடமளித்து, நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி உட்பட அரசாங்கத்துக்கு இருக்கிறது. நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள எங்களுக்கு போதுமான உறுப்பினர்கள் இல்லை. என்றாலும் இதன் மூலம் நியாயமான காரணங்களை வெளிப்படுத்த இடம் கிடைக்கிறது. அதேநேரம் இது அரசியல் பிரச்சினையல்ல. கட்சி அடிப்படையில் தாக்குதலில் மரணிக்கவில்லை. அதனா-ல் எமது நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்கின்ற, நாடாளுமன்றத்-தில் இருப்பவர்கள் கட்சி பேதமில்லாமல் இதற்கு ஆதரவளிக்கும் என நாங்கள் நம்புகிறோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**முத்துஐயன்கட்டு...**

இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் பொலிஸார் எவ்வித தலையீடுகளுமின்றி முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:–

"முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுக் குளத்தில் கடந்த சனிக்கிழமை காலை தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை ஐந்து பேர் முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். நால்வர் முகாமில் இருந்து தப்பித்துச் சென்றுள்ளார்கள். ஒருவர் காணாமல்போயிருந்தார். அவரின் சடலம்தான் முத்துஐயன்கட்டுக் குளத்தில் இருந்து பின்னர் மீட்கப்பட்டுள்ளது.

முகாமுக்குள் வைத்து இராணுவத்தினர் தம்மை மிக மோசமாகத் தாக்கினார்கள் என்று தப்பித்து வந்தவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் குளத்தில் வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடன் விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும், பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம்.

இவ்வாறான நிலையில் சனிக்கிழமை மாலை ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் ஒருசில இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் எவ்வித தலையீடுகளுமின்றி முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். பிரதான விடயம் யாதெனில் ஒரு சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் அது தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லுவது பிரயோசனமற்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் அந்தப் பிரதேச மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள். மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றார்கள். இதற்குச் செம்மணி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

செம்மணி – சித்துப்பாத்திப் பகுதியில் குறுகிய காலத்துக்குள் 147 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. பல வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களே எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டுள்ளனர் என்பது தற்போது தெரியவருகின்றது.

இவ்வாறான பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக நிலைகொண்டுள்ளதையும், அதனால் ஏற்படும் பாதிப்பையும் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதேவேளை, இராணுவப் பிரசன்னத்துக்குப் பாரிய எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முழுமையான ஹர்த்தாலில் ஈடுபடுமாறு சகல தரப்பினரிடமும் கோருகின்றோம். எமது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அநீதிகளைக் கருத்தில்கொண்டு வர்த்தகர்கள் அன்றைய தினம் கடையடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

சகல நடவடிக்கைகளையும் கைவிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுமையாக முடங்க வேண்டும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கோருகின்றோம்.

அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள் அனைவரும் இந்தக் ஹர்த்தால் போராட்டத்தில் ஒன்றிணைய வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சேவையாற்ற வாருங்கள்!

கற்றறிந்தோர், புத்திஜீவிகள், துறை சார்ந்த நிபுணர்கள், வல்லுநர்கள் போன்றோர் நாட்டை விட்டு வெளியேறுவதால் ஏற்படும் பிரச்சினை குறித்து இப்பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம். இதனை 'மூளை வடிகால்' (brain drain) என்று ஆங்கிலத்திலே குறிப்பிடுகிறார்கள்.

குறிப்பாக சுகாதார - மருத்துவத் துறையில் இந்த விவகாரம் பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்து வருவது குறித்து பல தரப்பிலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அந்த மருத்துவத் துறையின் ஒரு பிரிவு தொடர்பாக இப்போது அதன் தலைமை நிலையில் இருக்கின்ற ஒருவர் சுட்டிக்காட்டி இருக்கிறார். இந்த பிரச்சினை வடக்கு, கிழக்கைப் பெரிய அளவில் பாதித்திருப்பதாக அவர் கூறுகிறார்.

நாட்டிலேயே அதிக தற்கொலை வீதங்களைக் கொண்ட - போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட - வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இந்தப் பிரச்சினையால், குறிப்பாக மனநல மருத்துவர்களின் பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் பணியாற்றும் மனநல மருத்துவ நிபுணர்கள் தங்கள் எல்லைக்கு அப்பால் - வரம்பு மீறி - பணியாற்ற வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகி இருக்கின்றனர்.

இந்தத் தகவலை மனநல மருத்துவர்கள் கட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஜீவன அமரசிங்க இம்மாத ஆரம்பத்தில் கொழும்பில் நடைபெற்ற புத்திஜீவிகளின் ஒரு கூட்டத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மனநல மருத்துவர்களின் காலியிடங்களை நிரப்புவது என்பது சுகாதார அமைச்சகத்துக்கு மிகவும் சவாலான பணியாக இருப்பதாக அவர் விசேடமாகக் குறிப்பிட்டுச் சுட்டுகின்றார்.

இலங்கையின் மனநல சிகிச்சை கொள்கையின்படி அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு மன மருத்துவர் இருக்க வேண்டும். ஆனால் அப்படி செய்ய முடியாத நிலையில் சுகாதார அமைச்சகம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆஸ்திரேலியாவுக்கும் பிரிட்டனுக்கும் இலங்கையின் மனநல மருத்துவர்கள் இடம்பெயர்வது தொடர்ந்து நடைபெற்று வருவதாக விசனம் தெரிவித்துள்ள அவர், மக்களின் நலனுக்காக மனநல மருத்துவர்களை நாடு தக்க வைத்துக் கொள்ள சில முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறார்.

இளம் மனநல மருத்துவர்கள் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது நாட்டிற்குத் தாங்கள் பணியாற்றுவதை ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

மனநல மருத்துவத்துறை வெற்றிடங்கள் ஆஸ்திரேலியாவில் இருக்கும் வரை இலங்கையில் கிராமப்புறங்களில் உள்ள மனநல மருத்துவர்களின் காலியிடங்களை நிரப்பவே முடியாது என்று அவர் விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றமை இலங்கையின் - குறிப்பாக வடக்கு, கிழக்கின் - யதார்த்த நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது.

நாட்டில் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும்போது போதை வஸ்து பாவனை உட்பட பல்வேறு பிரச்சினைகளில் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மனநல மருத்துவர்களின் சேவை மிக அத்தியாவசியமானதாகும். ஆனால் அதனை உரிய முறையில் வழங்க முடியாமல் இருப்பது நாட்டின் பெரும் துரதிர்ஷ்டம் என்று மனநல மருத்துவக் கட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஜீவன அமரசிங்க கூறுகின்றமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் 71 முதுகலை மருத்துவர்கள் உட்பட 108 மனநல மருத்துவர்கள் பணியில் உள்ளனர். அவர்களில் 77 பேர் சுகாதார அமைச்சின் கீழும், 25 பேர் பல்கலைக்கழகங்கள் போன்ற தரப்புகளுடனும், ஆறு பேர் இராணுவம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் போன்றவற்றுடனும் பணியாற்றுகின்றனர்.

சுகாதார அமைச்சு வைத்திருக்கும் 77 மனநல மருத்துவர்களின் வழிகாட்டலில்தான் நாடு முழுவதிலும் மனநல மருத்துவ சிகிச்சைகள் வழிநடத்தப்படுகின்றன என்பதுதான் நாட்டின் கஷ்டமான - இக்கட்டான - நிலைமையாகும்.

வெளிநாடுகளில் பணிபுரியும் - இலங்கையில் கல்வி கற்ற - மனநல மருத்துவர்கள் தமது தாயகம் குறித்து பொறுப்புணர்வுடன் சிந்திக்க வேண்டிய தருணம் இது என்பதை சுட்டிக்காட்டி வலியுறுத்த விரும்புகிறோம்.




# ஜே.வி.பியின் பிடியில் இளைஞர் கழகங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

இளைஞர் கழகங்கள், ஜே.வி.பியின் சோஷலிச இளைஞர் சங்கத்தின் பணயக் கைதியாக்கப்பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இளைஞர் சம்மேளன உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நீண்ட காலமாக, நமது நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தந்த இளைஞர் கழகங்கள் இப்போது முழுமையாக அரசியல்மயமாக்கப்பட்டுள்ளன.

அவை தற்போதைய அரசாங்கத்தின் பகடைக்காயாக மாற்றப்பட்டு, ஜே.வி.பி.யின் அரசியல் பிடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இளைஞர் கழகங்கள் சோசலிச இளைஞர் சங்கம் என்ற அரசியல் அமைப்பின் பணயக்கைதிகளாக மாறிவிட்டது.

பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டம் என்ற அடிப்படையில் செயல்பட்ட இளைஞர் சம்மேளனங்கள், இன்று இளைஞர் யுவதிகளின் ஆற்றல் திறமைக்கு இடம்கொடுக்காமல் ஜே.வி.பியின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ளன.

நியமிக்கப்படவுள்ள தேசிய இளைஞர் சம்மேளன தெரிவில் ஆளும் தரப்பினரின் அரசியல் ஆதரவாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரச அதிகாரம், அரசாங்கத்தின் அதிகாரம், அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் போன்ற தரப்பினரின் அதிகாரங்களைப் பயன்படுத்தி இளைஞர்கள் மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

தற்போதைய அரசாங்கம் இளைஞர்களிடமிருந்து பறித்த இளைஞர்களினது உரிமைகளை, ஜனநாயக உரிமைகளை இளைஞர்களுக்கு மீண்டும் பெற்றுத் தருவோம்.

இந்த விடயத்தில் நாம் மிகவும் முற்போக்கான, ஜனநாயக ரீதியிலான முன்னெடுப்பை நோக்கி நகர்வோம்.

அரசாங்கம் செய்த இந்த தவறான செயல்முறையை கைவிடாவிட்டால் இந்த மோசமான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு பதிலளிக்க வேண்டி வரும்.” என்று தெரிவித்துள்ளார்.




















# மன்னாரில் கனிய மணல் சுரண்டல் யாழில் விழிப்புணர்வுப் போராட்டம்!

மன்னாரில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிம மணல் சுரண்டலை கண்டித்து, இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வுப் போராட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் பெரும் கேள்வி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கும் மேலாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணல் அகழ முயற்சித்து வருகிறது.

இந்த அகழ்வைத் தடுக்கவும், மக்களின் பூர்வீக நிலங்களையும் இருப்பையும் பாதுகாக்கவும் “கருநிலம் பாதுகாப்பு” என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் அந்த விழிப்புணர்வு போராட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் அரசியல் பிரதிநிதிகள், இளையோர் எனப் பலரும் கலந்துகொண்டமையுடன் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி ஒன்றையும் முன்னெடுத்தனர்.

















# ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆடிமுருகவேல் அலங்காரச் சித்திரத் தேர்த்திருவிழா

ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆடி முருகவேல் அலங்கார சித்திரத் தேர்த்திருவிழா நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சிவஸ்ரீ ரகுராமக்குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

வசந்த மண்டபத்தில் தீபாராதனையைத் தொடர்ந்து ஆலயத்தில் சுவாமி உள்வீதி வலம் வருவதையும், சித்திரத்தேரில் வள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி பக்தர்கள் புடைசூழ ஆரோகணித்து ஊர்வலமாக வெளிவீதிவலம் செல்வதையும், தேரின் முன்னே ஆலய தர்மகர்த்தாக்களையும் படங்களில் காணலாம்.









# இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் இ.தொ.கா. பிரதிநிதிகள் சந்திப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள், இந்திய தூதரக அதிகாரிகளை நேற்று நுவரெலியா கிரேன்ட் ஹோட்டலில் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் டாக்டர் சத்தியாஞ்சல் பாண்டே மற்றும் இந்திய இணை உயர்ஸ்தானிகர் (கண்டி) வீ.எஸ். சரண்யா ஆகியோரை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில், இருநாட்டு நட்புறவு, தொழிலாளர் நலன், சமூக முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன்போது இ.தொ.கா சார்பில் நிதிச்செயலாளரும், தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாநகர சபை பிரதி மேயர் சிவன் ஜோதி யோகராஜ், கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத், அமைப்பாளர் சின்னையா பாலகிருஷ்னன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.








# அழிந்துவரும் பறவையினத்தைப் பாதுகாக்கக் கோரி வேலணையில் நாட்டப்பட்ட விழிப்புணர்வு பலகை!

இயற்கைக்கான கூட்டிணைவில் சமூக பங்களிப்பை மேம்படுத்தும் நோக்குடன்

அழிவின் விளிம்பில் இருக்கும் Indian Courser (கல் குருவி) பறவை இனத்தைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக விழிப்புணர்வு பலகை ஒன்று மண்கும்பான் பிள்ளையாளர் கோவிலுக்கு முன்புறமாக நாட்டப்பட்டது,

Indian Courser பறவையினம் மிகவும் அரிதான, அழிந்துவிடும் ஆபத்தின் விளிம்பில் காணப்படும் ஓர் உயிரினமாகும்.

இதேநேரம் இலங்கையில் வடபகுதியான நெடுந்தீவில் மட்டுமே Indian Courser என்ற இந்தப் பறவை காணப்படுகின்றது.

அழிவின் விளிம்பில் இருக்கும் இந்தப் பறவை இனத்தைப் பாதுகாப்பதற்காக சி.சி.எச். நிறுவனம், இயற்கை ஊக்குவிப்புக் கழகம் மற்றும் டயலொக் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு நெடுந்தீவு பிரதேச செயலகம், வட மாகாண சுற்றுலா பணியகம், நெடுந்தீவு பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம் ஆகியனவும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றன.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் இந்தப் பறவையினத்தின் இருப்பை உறுதிசெய்யும் செயற்றிட்டத்தின் விழிப்புணர்வு பலகை வேலணை பிரதேசத்தின் மண்கும்பான் பகுதியில் கால் நடை மேச்சற்றரைக்காக அடையாளப்படுத்தப்பட்ட அரச நிலத்தில் நாட்டி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச செயலர், வேலணை பிரதேச சபையின் தவிசாளர், வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள், வேலணை விரதேச சபையின் அதிகாரிகள், டயலொக் நிறுவன உத்தியோகத்தர்கள், இயற்கை ஊக்குவிப்பு கழக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பெண் ஒருவர் உட்பட 3 போதைப் பொருள் வியாபாரிகள் கஞ்சா, ஐஸ், ஹரோயினுடன் கருவப்பங்கேணியில் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிந்தவூரைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 3 பேரை 20 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ கேரளா கஞ்சா, 50 கிராம் ஐஸ் போதை பொருள், 25 கிராம் ஹரோயின் போதை பொருள் ஆகியவற்றுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கருவப்பங்கேணியில் வைத்துத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.எம். பிரியந்த பண்டார தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்தினவின் ஆலோசனைக்கமைய, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பரியந்த பண்டாரவின் வழிகாட்டலில், பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.சந்திமா தலைமையில் பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஜெயசிங்க (20637), இகலகம (15468), ஜெயரத்தின (53900), கொடிக்கார (40202), டிகாஷான் (90102), தேவராசா (90890) ஆகியேர் கொண்ட குழுவினர் சனி இரவு கருவப்பங்கேணி அம்புறோஸ் வீதியில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது அந்த வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் உட்பட 3 பேர் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஒரு கிலோ கேரளா கஞ்சா, 50 கிராம் ஐஸ் போதை பொருள், 25 கிராம் ஹரோயின் போதை பொருள் ஆகியன மீட்கப்பட்டன.

கருவப்பங்கேணியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவர், அம்பாறை சாய்ந்த மருதைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் மற்றும் நிந்தவூரைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட பெண்ணின்கணவர்போதை வியாபாரத்தில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடன் சிறையில் இருந்த கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த போதை பொருள் வியாபரியான இளைஞனுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அந்த இளைஞன் சிறையில் இருந்து நீதிமன்றப் பிணையில் அண்மையில் வெளிவந்து நிந்தவூரைச் சேர்ந்த பெண்ணுடனும் சாய்ந்தமருதைச் சேர்ந்த இளைஞனுடன் சேர்ந்து இந்த வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










# தமிழக மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டம்

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

இராமேசுவரத்திலிருந்து சனிக்கிழமை காலை கடலுக்குச் சென்ற டல்லஸ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகு மன்னார் வடக்கு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என கூறி சனிக்கிழமை பிற்பகல் படகை சிறைபிடித்தனர்.

படகிலிருந்த டல்லஸ் (வயது 56), சிலைடன் (வயது 26), அருள் ராபர்ட் (வயது 53), லொய்லன் (வயது 45), ஆரோக்கிய சான்ரின் (வயது 20), பாஸ்கர் (வயது 45), ஜேசு ராஜா (வயது 32) ஆகிய 7 மீனவர்களை மீது, எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மன்னார் நீதிபதி வீட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்கள் 07 பேர்களையும், ஒகஸ்ட் 21 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். தொடர்ந்து மீனவர்கள் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர் என இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே மீனவர்களின் அவசர ஆலோசனை கூட்டம் மீனவ பிரதிநிதி சேசுராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கடந்த 50 நாள்களில் 64 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆறு மாதம், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று 24 மீனவர்கள் தண்டனை கைதிகளாக உள்ளனர். இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 88 மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இன்று திங்கள் கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது, ஒகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது, ஒகஸ்ட் 19 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் ரயில் மறியல் போராட்டம் நடத்துவது உள்ளிட்ட தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

மேலும், நீண்ட காலமாக இருந்து வரும் இந்திய -இலங்கை மீனவர் பிரச்சினைக்கு நிரந்திர தீர்வு காணவும், கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையை பெற்ற தர மத்திய, மாநில அரசுகள் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சுரேஷ் கோபியை காணவில்லை; கேரள பொலிஸ் நிலையத்தில் புகார்



நடிகரும் மத்திய இணை அமைச்சருமான சுரேஷ் கோபியை காணவில்லை என கேரள பொலிஸில் புகாரளிக்கப் பட்டுள்ளது.

கேரள மாணவர் சங்கத்தின் மாவட்டத் தலைவரான கோகுல் குருவாயூர் என்பவர் திருச்சூர் கிழக்கு பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரில், கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் சத்தீஸ்கரில் கைது செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு சுரேஷ் கோபியை அந்தப் பகுதியில் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் "கடந்த இரண்டு மாதங்களாக, மத்திய அமைச்சராகவும் திருச்சூர் மக்களவை எம்.பியாகவும் இருக்கும் அவர், தொகுதியில் நடக்கும் எந்த நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவில்லை. மேயர் மற்றும் வருவாய்த் துறை அமைச்சரால் கூட அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. தொகுதியில் மத்திய அரசின் திட்டம் ஒன்றை தொடங்கி வைக்க சுரேஷ் கோபியை அவர்கள் தொடர்பு கொள்ள முயற்சித்த போது அவரிடம் அவர்களால் பேசமுடியவில்லை. அதுமட்டுமின்றி தொகுதில் யாராலும் அவரை சந்திக்க இயலவில்லை. அவருடைய அலுவலகத்துக்கு சென்றால் அவர் எங்கு இருக்கிறார்? எப்போது வருவார் என்று அங்குள்ள ஊழியர்களுக்கும் தெரியவில்லை.

நத்தார் பண்டிகையின் போது கிறிஸ்தவர்களின் வீடுகளுக்கு சென்று கேக் வழங்குவார் சுரேஷ் கோபி. ஆனால் சத்தீஸ்கர் மாநிலத்தில் கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் மீது பொய் வழக்கு பதியப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு அவரை எங்கும் காணவில்லை" என்று கோகுல் குருவாயூர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸின் கிளை அமைப்புகளில் ஒன்றான கேரள மாணவர் சங்கம், சுரேஷ் கோபிக்கு எதிரான பிரச்சாரங்களை முடுக்கி விட இருப்பதாக தெரிவித்துள்ளது. மேலும் சுரேஷ் கோபி தொகுதிக்கு வராதது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியுள்ள கேரள மாணவர் சங்கம், அவர் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வரை போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

# உக்ரைன் அமைதிக்காக அறிக்கை வெளியிட்ட ஐரோப்பிய தலைவர்களுக்கு ஜெலன்ஸ்கி நன்றி



உக்ரைன் தேசத்தின் அமைதிக்காக உக்ரைனுக்கும், மக்களுக்கும் ஆதரவு அளிப்பவர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தொடங்கிய உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை நிறுத்த பல்வேறு உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாக உள்ள ட்ரம்ப், தனது தேர்தல் பிரச்சாரம் மற்றும் பல்வேறு உரைகளில் தொடர்ந்து உக்ரைன் – ரஷ்யா போர் நிறுத்தம் குறித்து பேசி வருகிறார்.

இந்த சூழலில் ஐரோப்பாவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்கள் உக்ரைனில் அமைதி திரும்ப வேண்டும் என கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, ஜெர்மனியின் ஜனாதிபதி ஃபிரெட்ரிக் மெர்ஸ், பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர், போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க், பின்லாந்து ஜனாதிபதி ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் தள பதிவில், “போரின் முடிவு நியாயமானதாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன். உக்ரைனின் அமைதிக்காக உக்ரைனுடனும், மக்களுடனும் நிற்கும் அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். இது நமது ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு நலனை உறுதி செய்கிறது.

உக்ரைனின் அமைதிக்காக பேசி அறிக்கை வெளியிட்டுள்ள ஜனாதிபதி மக்ரோன், பிரதமர் மெலோனி, ஜனாதிபதி மெர்ஸ், பிரதமர் ஸ்டார்மர், பிரதமர் டஸ்க், அதிபர் ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோரை உக்ரைன் முழுமையாக ஆதரிக்கிறது” என தெரிவித்துள்ளார்.

# புடின் – ட்ரம்ப் உத்தேச சந்திப்பு; ஐரோப்பிய தலைவர்கள் வரவேற்பு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இடையே எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள உத்தேசச் சந்திப்பினை ஐரோப்பியத் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

அதேவேளை, உக்ரைன் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பாக ரஷ்யாவிற்கு இராஜதந்திர ரீதியாக அழுத்தத்தை அமெரிக்கா பிரயோகிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

இந்தச் செயல்பாட்டின் மூலம் ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதியாகப் பேண முடியும் எனவும் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், மூன்றரை ஆண்டுகளாக நடைபெறும் யுத்தத்தினை நிறுத்தி, நிரந்தரச் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றின் அவசியத்தை உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -11.08.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றம் தாமதமாக ஏற்படும். இதனால் கவலை ஏற்படும். பயணங்கள் ஆறுதல் அளிக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. பணிகளில் தவறுகள் நேரலாம். உங்கள் செயல்திறனைக் கண்டு மேலதிகாரிகள் அதிருப்தி அடைவார்கள்.

இன்று இருவரிடையே மகிழ்ச்சி காணப்படாது. மந்தமான மனநிலை காரணமாக இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை காணப்படாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தோல் அரிப்பு ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உங்கள் சமயோசித புத்தி மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் செயல்திறன் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வோடு நடந்து கொள்வீர்கள். இது உறவை இன்னும் பலப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும்.காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும்.

உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் மற்றும் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகளை இன்று நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற இயலும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நம்பிக்கையோடு வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் பிணைப்பும் அதிகரிக்கும்.

நிதிநிலைமை இன்று பிரகாசமாக இருக்கும்.பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்களின் உறுதியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




முக்கிய விஷயங்களை இன்று தொடங்குவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். பிறருடன் பேசும் போது கவனம் சேவை. பிரார்த்தனை மூலம் அமைதி பெறலாம்.

இன்று பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நன்மை காண பொறுமை அவசியம். இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

கண் வலி மற்றும் முதுகு வலிக்கான வாய்ப்பு உள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனால் தன்னம்பிக்கை இழக்க நேரிடும். இதயம் கனப்பதாக உணர்வீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. இதனால் கவலை ஏற்படும். சக பணியாளர்களுடனான உறவு முறை சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு பணம் கரையும். இன்று பணத்தை சேமிக்க இயலாது.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலை வலி காணப்படுகின்றது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் அக்கம்பக்கதினர்கள் ஆதரவாக இருப்பார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலனளிக்கும்.

உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் அபாரமான திறமையைக் கண்டு சக பணியாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கான சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பங்கு போன்ற இதர வகைகள் மூலமாகவும் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் இருப்பீர்கள்.




இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். எளிதில் வெற்றி காண்பதை கடினமாக உணரவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். பாதுகப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் பணிகளை திறமையாக செயல்படுத்த இயலாது.

உங்கள் உறவில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. உங்களின் நெருங்கிய நபர் ஒருவருடைய உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். தகுந்த நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும்.




இன்று திருப்தி குறைந்து காணப்படும். கவனமாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்களை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும். இதனால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க முடியும்.

அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக பண இழப்பு நேரலாம். இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை ஆறுதல் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் -11.08.2025




இன்று மந்த நிலையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளை ஒப்படைக்கும் முன்பு சரிபார்த்து தருவது சிறந்தது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். என்றாலும் அகந்தை உணர்வு தலை தூக்கும். அதனைத் தவிர்த்து இருவரும் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். இன்று அதிகமாக சேமிக்கவும் இயலாது.

இன்று ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும். உங்கள் தந்தையின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று அபாரமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை உங்கள் நெருங்கிய உறவுகளை மகிழ்ச்சி யுறச் செய்யும். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். சக பணியாளர்களுக்கு நீங்கள் உதாரணமாக இருப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இருவரும் சிறந்த ஜோடியாகத் திகழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக் இருக்கும். உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை மூலம் இலக்கில் வெற்றி பெறுவீர்கள். ஸ்திரமான முடிவுகள் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் நேர்மையான முயற்சி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் இருவரும் நல்ல தொடர்புடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெளியிடங்களுக்குச் சென்று ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வளர்ச்சியில் தாமதங்கள் காணப்படும். விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். வெற்றி பெறுவதற்கு திறமையாக கையாள வேண்டும்.

உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே சமநிலையோடு இருந்து உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். சேமிப்பதில் கட்டுப்பாடு காணப்படும். இந்தச் சூழ்நிலைகளை விவேகத்துடன் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். தக்க நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும்.

# தேசிய பூங்காக்களை பார்வையிட இணையம் ஊடாக நுழைவுச்சீட்டு

தேசிய பூங்காக்களை பார்வையிடுவதற்காக இணையம் ஊடாக நுழைவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கவுடுல்ல தேசிய பூங்காவை பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் நீண்ட வரிசை காணப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் அசௌகரிங்களுக்குள்ளானார்கள் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் ஏற்படும் அசௌகரியங்களை குறைத்துக்கொள்ளும் நோக்கில் இணையத்தளம் ஊடாக நுழைவுச்சீட்டுகளை விநியோகிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.